2019 ஜூலை 16]

பெரம்பூர் பகுதி உட்பட, கிட்டத்தட்ட 960 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒவ்வொரு பகுதியாக புதைவடத் தடமாக அமைப்பதற்குண்டான பணிகள் ரூ.2,567 கோடி செலவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் தொகுதியிலும் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் முழுவதுமாக புதைவடத் தடமாக அமைக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். நிதி நிலைமைக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதியாக நாங்கள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றோம். பெரம்பூரைப் பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே டெண்டர் விடப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

பாலம் கட்டுதல்

***270—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதி–வண்டிகோட்டகம் சாலையில் கோரையாற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதி—வண்டிகோட்டகம் சாலையில் கோரையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டத்தின்கீழ் ரூ.2.79 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016—ல் நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இந்த அவைக்கு நான் கொடுத்த கேள்வி இன்றுதான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும், 2017—2018—ல் அந்தப் பணியை எடுத்திருக்கிறீர்கள். பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பணிகள்* allmost *முடிந்துவிட்டன. ஆனால், இன்றுவரையிலும் அந்தப் பாலம் திறக்கப்படாமல் உள்ளது. எனவே, தயவுகூர்ந்து அதை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். திறக்கப்படாமல் உள்ள அந்தப் பாலத்தை விரைந்து நீங்கள் திறக்க வேண்டும்.*

அதே ஊராட்சியில், வடபாதி—இடையர்நத்தம் இடையே பாமணி ஆற்றின் குறுக்கே மிகவும் முக்கியமான இன்னொரு பாலம் தேவையாக உள்ளது. அதையும் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். நீண்ட நாட்களாகப் பொது மக்கள் கோரிக்கை வைத்துவரும் நீடாமங்கலம் ஒன்றியம், காலாச்சேரி ஊராட்சி, மேலப்பூவனூர் கிராமத்தில் ஏறத்தாழ 2,000 குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். அங்கேயும் மயானத்திற்குச் செல்லும் சாலையில் பாலம் இல்லாமல் மழைக் காலங்களில் இடுப்பளவு தண்ணீரில் இறங்கி நடந்து போகும் அவல நிலை உள்ளது. அதேபோல், நீடாமங்கலம் ஒன்றியம், ராயபுரம், பிள்ளையார் கோயில் தெருவில் வசித்து வரும் மக்களுக்கும் அதே மயானப் பிரச்சினைதான் உள்ளது. மயானத்திற்குச் செல்லும் வழியில் பாலம் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். எனவே, மேலவாய்க்கால் பகுதியில் ஒரு பாலம் கட்டித் தரப்பட வேண்டும்.

ரிஷியூர் ஊராட்சியில் 3—வது வார்டிலும் இதே பிரச்சினை உள்ளது. ஆக, மயானச் சாலைகளுக்குச் செல்லும் பாலங்களுக்கு

2019 ஜூலை 16]

முக்கியத்துவம் அளித்து, நிச்சயமாக அங்கே புதிய பாலங்களை அமைக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதி–வண்டிகோட்டகம் சாலையில் கோரையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டத்தின்கீழ் ரூ.2.79 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம், மன்னார்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த வடபாதி கிராமத்தையும், மறுபுறம் தென்பாதி கிராமத்தையும் இணைக்கும் வகையில் அமைந்துள்ளது. தற்போது இப்பாலத்தை இணைக்கும் வடபாதி கோட்டகம் இணைப்புச் சாலைப் பணிகள் 3.55 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.3.25 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முடிவுறும். இந்தப் பாலமானது, வடபாதி, மரவக்காடு, ஏத்தக்குடி, சேரன்குளம், நெம்மேலி, ரங்கநாதபுரம் ஆகிய 6 கிராமங்களை இணைக்கிறது. இப்பாலம் கட்டப்பட்டதன்மூலம் 12 கிலோ மீட்டர் தூரம் குறைகிறது. இந்தச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் இப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 4,750 மக்கள் பயன்பெறுவார்கள். இப்பாலம் பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இதன்மூலம் அப்பகுதிகளில் வசிக்கும் 2,000 மக்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பணிகள் வேகமாக முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

அதேபோல், இன்னும் பல்வேறு பாலங்களைக் கேட்டிருக்கிறார். குறிப்பாக, மயானத்திற்குச் செல்லக்கூடிய பாலங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். கண்டிப்பாக அவை துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி ஒன்றியம், துலசேந்திரபுரம் ஊராட்சி, குடிக்காடு இடையர்நத்தம் இணைப்புச் சாலையில் மாலையிட்டான் வாய்க்கால் உள்ளது. அதில் பாலம் இல்லாததால் பொது மக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக ஆதி திராவிடர் நலப் பள்ளிக்கு மாணவர்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தப் பிள்ளைகள் சுற்றி வரவேண்டிய சூழ்நிலை இங்கே இருக்கிறது. மூவர்கோட்டையிலும் இலுப்பபடிவாய்க்கால் பகுதியிலும் பாலம் இல்லாமல் அங்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. வடுவூர், வடக்குத் தோப்பு, காந்தி நகர் பகுதிகளில் பாலங்களும் செருமங்கலம் ஊராட்சி, அப்பரசன்பேட்டையில் மயானத்திற்குச் செல்லும் வழியில் ஒரு பாலமும், கட்டக்குடி சின்னகாரக்கோட்டையிலே செருமங்கலம் வாய்க்காலில் பாலமும், இன்னும் பல இடங்களில் முக்கிய பாலங்களும் தேவைப்படுகின்றன.

முற்பகல் 10—25

நகராட்சி நிருவாகமும் உங்களிடமே இருப்பதால் ஒரு சிறிய கோரிக்கை. மன்னை நகரத்தில், கர்த்தநாதபுரம் பாலம் என்று ஒரு நடைபாலம் உள்ளது. அது மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. அந்த நடைபாலமானது, மன்னார்குடியில் இருக்கும் பல வார்டுகளை இணைக்கும் ஒரு பாலம். அதற்கும் ஆவன செய்ய வேண்டும். உங்கள் துறையிலே இருக்கின்ற காரணத்தினால் இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் கேட்டு முடித்துவிடுகிறேன். மன்னார்குடி நகரத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தை 9 ஆண்டுகளாக இதே அவையில் அப்பொழுது அமைச்சராக இருந்த அருமை அண்ணன் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் 99 கோடி ரூபாயில் முடித்துத் தருவதாகச் சொல்லி, 2011—2012—ல் என்னிடத்தில் வாக்குறுதி அளித்தார். இதுவரையில் அந்தப் பணிகள் துவங்கப்படவில்லை. தயவுகூர்ந்து நிச்சயமாக நீங்கள் அதை கவனிக்க வேண்டும்.

இறுதியாக, மன்னார்குடி பேருந்து நிலையத்திற்கு நான் நிதி ஒதுக்கினேன். அந்த நிதியை வேண்டாம் என்று திருப்பி அனுப்பினார்கள். ஏனென்றால், நீங்கள் பெரியதாகக் கட்டப்

2019 ஜூலை 16]

போகிறீர்கள் என்று நினைத்தோம். 3 வருடங்கள் ஆகின்றன. ஏறத்தாழ அதற்கு 1¼ கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினோம். நாங்கள், பாராளுமன்ற மேலவை உறுப்பினர்களிடமெல்லாம் பெற்றுத் தந்த நிதி, திருப்பி அனுப்பப்பட்டது. ஆனால், இதுநாள்வரை மன்னார்குடியில் அந்தப் பேருந்து நிலையம் அமையப்பெறவில்லை. தயவுகூர்ந்து அதையும் நீங்கள் உடனடியாக அமைத்துத் தரவேண்டும். இல்லையெனில், எங்களது நிதியையாவது நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும்கூட, அவருடைய தொகுதியைப் பற்றி, பாலங்களைப் பற்றி, தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளை, பணிகளை இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். பாலம் கட்டும் பணியைப் பொறுத்தளவிற்கு, குறிப்பாக மயானத்திற்குச் செல்லும் பாலங்களைத்தான் அதிகமாகக் கேட்டுள்ளார்கள். கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோதும் கிட்டத்தட்ட 550 பாலங்கள், 928 கோடி ரூபாயில் கட்டப்பட்டன. அதேபோன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வந்த பிறகு 304 பாலங்கள், 919 கோடி ரூபாயில் எடுக்கப்பட்டு, பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மயானங்களுக்குச் செல்லக்கூடிய அவசியமான பாலங்கள் குறித்து ஆய்வு செய்யப்படும். ஒரு பாலம்கூட, 10 கிலோ மீட்டர் அளவிற்கு சுற்றிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாக பொது மக்கள் சொல்லியிருந்தார்கள். அதுகுறித்து கண்டிப்பாக, துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்படும்.

அதேபோல, பாதாள சாக்கடைத் திட்டம், பேருந்து நிலையம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். கண்டிப்பாக துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து நிதிநிலைமையை

அனுசரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.*

திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்ட மக்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்கின்றவகையில் 2006–2011–லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து, இன்றைய எதிர்க்கட்சியினுடைய தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில், 620 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இந்த 3 மாவட்ட மக்களுடைய தாகத்தைப் போக்குவதற்காக அன்றைக்குத் துவக்கப்பட்டு, மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இன்று குடிதண்ணீர் பிரச்சினை, தமிழகம் முழுவதும் கூடுதலாக இருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில், அத்தகைய உயரிய திட்டத்தின்மூலம் பெறக்கூடிய தண்ணீர், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு முழுமையாகச் சென்றடையாததற்குக் காரணம் பராமரிப்புப் பணிகள் சரியாக இல்லை. ஆகவே, 10 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட அந்த உன்னதமான திட்டத்தின் பலன் முழுமையாக 3 மாவட்ட மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில் உரிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வி. மூலக் கேள்வி பாலத்தைப் பற்றியது. இருந்தாலும்கூட, குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி பேசியுள்ளார்கள்.*

2019 ஜூலை 16]

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தீர்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்த பின்னால்தான், இந்தத் திட்டத்திற்கு கூடுதலாக நிதியொதுக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. அது வாரியத்தினுடைய பராமரிப்பில் இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தனியாக ஒரு கூட்டத்தை நடத்தி, எந்தெந்தத் திட்டம் பராமரிப்பில் இருக்கின்றதோ, அதற்கெல்லாம் கூடுதலாக ஆட்களை நியமித்து, இந்த end–லிருந்து அந்த end–க்கு தண்ணீர் முழுமையாகப் போய்ச் சேர வேண்டுமென்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். திட்டம் நீட்டிச் செயல்படுத்தும்போது அந்தந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய சில பஞ்சாயத்தினுடைய தலைவர்கள், முன்னாள் தலைவர்கள் ஆங்காங்கே கூடுதலாகத் தண்ணீரை எடுப்பதால், தண்ணீர் dead end–க்குப் போய்ச் சேர முடியாத நிலை ஏற்படுகிறது. எல்லா இடங்களிலும் அந்த மாதிரியான சூழ்நிலை இருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு கூட்டத்தை நடத்தி அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தத் திட்டமும் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் போய்ச் சேர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்டாக்ஸ் சாலை, ராஜா முத்தையா சாலை போன்ற சாலைகளை இணைக்கின்ற நயினார் மேம்பாலம் என்றழைக்கப்படுகின்ற யானை கவுனி மேம்பாலம் என்பது, இருப்புப் பாதையின் கூடுதல் விரிவாக்கப் பணிகளுக்காகவும், பாலம் பழுதடைந்திருக்கின்ற காரணத்திற்காகவும் 27–12–2016 அன்று மூடப்பட்டது. இதுகுறித்து, 22–3–2017, 19–7–2017, 12–1–2018 மற்றும் 14–2–2019 ஆகிய நாட்களில் நான்கு முறை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். தற்போது, இந்தப் பாலப் பணியைச் செய்வதற்கு 30 கோடி ரூபாயை மாநகராட்சி ஒதுக்கியுள்ளது. இந்தப் பாலத்தின் பணியானது*

50:50 என்ற விகிதத்தில், மாநகராட்சியும், இரயில்வே துறையும் இணைந்து கட்டப்பட வேண்டியதாகும். 100 மீட்டர் அணுகுசாலை முழுவதுமாக இரயில்வே துறைமூலம் கட்டப்பட வேண்டியுள்ளது. என்னுடைய கேள்வி என்னவென்றால், இரண்டரை ஆண்டுகள் கடந்தும், இந்தப் பாலத்தினை இடிக்கின்ற பணி இன்னும் துவக்கப்படவில்லை. ஏனென்றால், மின் பகிர்மானத்தினுடைய உயர்மின் கம்பிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அவை மாற்றியமைக்கப்பட்டால்தான், அந்தப் பாலத்தை இடிக்கின்ற பணி துவங்கப்படும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இதில் மின்சார வாரியமும், உள்ளாட்சித் துறையும், இரயில்வே துறையும் ஒருங்கிணைந்து ஒரு குழுவினை அமைத்து, அந்தப் பகுதியில் உள்ள இந்தப் பாலத்தை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலால், மூச்சுகூட விட முடியாத அளவுக்கு, காலை நேரங்களில் பள்ளிக்குச் செல்பவர்கள், பணிக்குச் செல்பவர்கள் அதிக சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். ஆகவே, அரசு இந்தப் பாலம் கட்டுகின்ற பணியை துரிதப்படுத்தி, வேகப்படுத்தி, விரைவாக, ஓரிரு ஆண்டுகளுக்குள்ளாவது முடிப்பதற்குண்டான முயற்சியை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியிலே, அந்த பாலப் பணி சம்பந்தமான பாதி பதிலை அவரே கொடுத்துவிட்டார். இத்திட்டத்திற்காக, ரூ.30 கோடியை பெருநகர சென்னை மாநகராட்சி இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறது. 50:50 என்ற விகிதத்தில், இன்றைக்கு இரயில்வே துறையும், சென்னை மாநகராட்சியும் இணைந்து, அந்தப் பாலப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன. 23–7–2019 அன்று ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தளவாடங்களை மாற்றியமைத்த பின்னர், பழைய பாலத்தினை இடிப்பதற்கான பணிகள் துவங்கப்படும் எனவும், புதிய பாலம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தனியே கோரப்படும் எனவும் இரயில்வே துறை

2019 ஜூலை 16]

தெரிவித்துள்ளது. இரயில்வே துறையால், இரயில்வே பகுதியில் புதிய பாலம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டவுடன், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இத்திட்டத்திற்காக, கூடுதலாக 46.04 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். மீண்டும், 9.85 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***47290—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி பேரூராட்சியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி பேரூராட்சியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.